# நான்மணிக்கடிகை

#
மதி மன்னும் மாயவன் வாள்-முகம் ஒக்கும்
கதிர் சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்
முது நீர் ப் பழனத்து த் தாமரை த் தாளின்
எதிர் மலர் மற்று அவன் கண் ஒக்கும் பூவை ப்
புது மலர் ஒக்கும் நிறம்

#
படியை மடியகத்து இட்டான் அடியினன்
முக்கால் கடந்தான் முழு நிலம் அ-க்-காலத்து
ஆன் நிரை தாங்கிய குன்று எடுத்தான் சோவின்
அருமை அழித்த மகன்

#1
எள்ளற்க என்றும் எளியர் என்று என்-பெறினும்
கொள்ளற்க கொள்ளார் கை மேற்பட உள்-சுடினும்
சீறற்க சிற்றில் பிறந்தார்-ஐ கூறற்க
கூறல்லவற்றை விரைந்து

#2
பறை-பட வாழா அசுண-மா உள்ளம்
குறை-பட வாழார் உரவோர் நிறை வனத்து
நெல்-பட்ட-கண்-ஏ வெதிர் சாம் தனக்கு ஒவ்வா ச்
சொல் பட்டால் சாவது-ஆம் சால்பு

#3
மண்ணி அறிப மணி நலம் பண்-அமைத்து
ஏறிய-பின் அறிப மா நலம் மாசு-அற ச்
சுட்டு அறிப பொன்-இன்-நலம் காண்பார் கெட்டு அறிப
கேளிர்-ஆன்-ஆய-பயன்



-------------------------------------
proofed and segmented by v.s.r

#4
கள்ளி–வயிற்று–இன் அகில் பிறக்கும் மான்–வயிற்று
ஒள்–அரிதாரம் பிறக்கும் பெருங்–கடல்–உள்
பல்–விலைய–முத்தம் பிறக்கும் அறிவார் யார்
நல்–ஆள் பிறக்கும் குடி

#5
கல்–இல் பிறக்கும் கதிர் மணி காதலி
சொல்–இல் பிறக்கும் உயர்–மதம் மெல்ல்–என்
அருள்–இல் பிறக்கும் அற–நெறி எல்லாம்
பொருள்–இல் பிறந்துவிடும்

#6
திரு ஒக்கும் தீது–இல்–ஒழுக்கம் பெரிய–
அறன் ஒக்கும் ஆற்றின் ஒழுகல் பிறன்–ஐ க்
கொலை ஒக்கும் கொண்டு கண்மாறல் புலை ஒக்கும்
போற்றாதார்–முன்னர் ச் செலவு

#7
கள்வம்–என்பார்–க்கு–உம் துயில்–இல்லை காதலி–மாட்டு
உள்ளம் வைப்பார்–க்கு–உம் துயில்–இல்லை ஒண்–பொருள்
செய்வம் என்பார்–க்கு–உம் துயில்–இல்லை அ–ப்–பொருள்
காப்பார்–க்கு–உம் இல்லை துயில்

#8
கற்றார்–முன் தோன்றா கழிவு–இரக்கம் காதலித்து ஒன்று
உற்றார்–முன் தோன்றா உறா–முதல் தெற்ற்–என
அல்ல–புரிந்தார்–க்கு அறம் தோன்றா எல்லாம்
வெகுண்டார்–முன் தோன்றா–கெடும்

#9
நிலத்துக்கு அணி என்ப நெல்–உம் கரும்பு–உம்
குளத்துக்கு அணி என்ப தாமரை பெண்மை

நலத்துக்கு அணி என்ப நாணம் தனக்கு அணி
தான் செல் உலகத்து அறம்

#10
கந்து–இல் பிணிப்பர் களிற்றை கதம் தவிர
மந்திரத்தினுல் பிணிப்பர் மா–நாகம் கொந்தி
இரும்பு–இன் பிணிப்பர் கயத்தை சான்றோர்–ஐ
நயத்தின் பிணித்துவிடல்

#11
கன்றுமை–வேண்டும் கடிய பிறர் செய்த
நன்றி–ஐ நன்று–ஆ க் கொளல்–வேண்டும் என்றும்
விடல் வேண்டும் தன்–கண் வெகுளி அடல்–வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை

#12
பல்–இன்–ஆன் நோய் செய்யும் பாம்பு எல்லாம் கொல்–களிறு
கோட்டான் நோய் செய்யும் குறித்தார்–ஐ ஊடி
முகத்தான் நோய் செய்வர் மகளிர் முனிவர்
தவத்தின் தருக்குவர் நோய்

#13
பறை நன்று பண் அமையா யாழின் நிறை நின்ற
பெண் நன்று பீடு–இலா–மாந்தர்–இன் பண் அழிந்து
ஆர்தல்–இன் நன்று பசித்தல் பசைந்தார்–இன்
தீர்தல்–இன் தீ ப் புகுதல் நன்று

#14
வள–ப்–பாத்தி–உள் வளரும் வண்மை கிளை–க்–குழாம்
இன்–சொல்–குழி–உள் இனிது–எழூஉம் வன்–சொல்
கரவு எழூஉம் கண் இல் குழி–உள் இரவு எழூஉம்
இன்மை–க்–குழி–உள் விரைந்து



-------------------------------------
proofed and segmented by v.s.r

#15
இன்னுமை–வேண்டின் இரவு எழுக இ–ந்–நிலத்து
மன்னுதல் வேண்டின் இசை நடுக தன்னொடு
செல்வது வேண்டின் அறம் செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்

#16
கடல்–குட்டம் போழ்வர் கலவர் படை–க்–குட்டம்
பாய்–மா–உடையான் உடைக்கிற்கும் தோம் இல்
தவ–க்–குட்டம் தன்னுடையான் நீந்தும் அவை–க்–குட்டம்
கற்றான் கடந்துவிடும்

#17
பொய்த்தல் இறுவாய நட்புக்கள் மெய்த்து–ஆக
மூத்தல் இறுவாய்த்து இள–நலம் தூக்கு இல்
மிகுதி இறுவாய செல்வங்கள் தம்–தம்–
தகுதி இறுவாய்த்து உயிர்

#18
மனை–க்கு ஆக்கம் மாண்ட–மகளிர் ஒருவன்
வினை–க்கு ஆக்கம் செவ்வியன்–ஆதல் சின–ச்–செவ்–வேல்
நாட்டு–ஆக்கம் நல்லன் இ–வ்–வேந்து என்றல் கேட்டு–
ஆக்கம்
கேளிர் ஒரீஇ–விடல்

#19
பெற்றான் அதிர்ப்பின் பிணை–அன்னாள் தான் அதிர்க்கும்
கற்றான் அதிர்ப்பின் பொருள் அதிர்க்கும் பற்றிய
மண் அதிர்ப்பின் மன்னவன் கோல் அதிர்க்கும் பண்
அதிர்ப்பின்
பாடல் அதிர்ந்துவிடும்


-------------------------------------
proofed and segmented by v.s.r

#20
மனை-க்கு ப் பாழ் வாணுதல்-இன்மை தான் செல்லும்
திசை-க்கு ப் பாழ் நட்டோர்-ஐ-இன்மை இருந்த-
அவை-க்கு ப் பாழ் மூத்தோர்-ஐ-இன்மை தனக்கு ப் பாழ்
கற்று-அறிவு இல்லா உடம்பு

#21
மொய் சிதைக்கும் ஒற்றுமை-இன்மை ஒருவன்-ஐ ப்
பொய் சிதைக்கும் பொன்-போலும் மேனி-ஐ பெய்த
கலம் சிதைக்கும் பால்-இன்-சுவை-ஐ குலம் சிதைக்கும்
கூடார்-கண் கூடி-விடின்

#22
புகழ் செய்யும் பொய்யா விளக்கம் இகழ்ந்து ஒருவன்
பேண்மை செய்வது பேதைமை காணு க்
குருடர்-ஆ ச் செய்வது மம்மர் இருள் தீர்ந்த
கண்ணர்-ஆ ச் செய்வது கற்பு

#23
மலைப்பினும் வாரணம் தாங்கும் குழவி
அலைப்பினும் அன்னே என்று ஓடும் சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினை செய்யார் ஒட்டார்
உடன் உறையும் காலம்-உம் இல்

#24
நசை நலம் நட்டார்-கண் நந்தும் சிறந்த
அவை நலம் அன்பு-இன் விளங்கும் விசை மாண்ட
தேர்-நலம் பாகன்-ஆல் பாடு எய்தும் ஊர்-நலம்
உள்ளான்-ஆல் உள்ளப்படும்

#25
அஞ்சாமை அஞ்சுக ஒன்றின் தனக்கு ஒத்த
எஞ்சாமை எஞ்சும் அளவு எல்லாம் நெஞ்சு அறிய க்


-------------------------------------
proofed and segmented by v.s.r

கோடாமை கோடி–பொருள் பெறினும் நாடாமை
நட்டார்–கண் விட்ட வினை

#26
கோல் நோக்கி வாழும் குடி–எல்லாம் தாய்–முலை–இன்–
பால் நோக்கி வாழும் குழவி–கள் வான–த்–
துளி நோக்கி வாழும் உலகம் உலகு–இன்
விளி நோக்கி இன்புறூஉம் கூற்று

#27
கற்ப கழி–மடம் அஃகும் மடம் அஃக
புற்கம் தீர்ந்து இ–வ்–உலகு–இல் கோள் உணரும் கோள் உணர்ந்தால்
தத்துவம்–ஆன–நெறி படரும் அ–ந்–நெறி–ஏ
இ–ப்–பால்–உலகத்து இசை நிறீஇ உ–ப்–பால்
உயர்ந்த உலகம் புகும்

#28
குழித்துழி நிற்பது நீர் தன்னை ப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம் அழித்து ச்
செறுவுழி நிற்பது காமம் தனக்கு ஒன்று
உறுவுழி நிற்பது அறிவு

#29
திரு–இன்–திறல்–உடையது–இல்லை ஒருவன்–கு
கற்றல்–இன்–வாய்த்த–பிற இல்லை எற்று–உள்ளும்
இன்மை–இன்–இன்னாதது இல்லை இலம் என்னும்
வன்மை–இன்–வன்பாட்டது இல்

#30
புகை–வித்து–ஆ ப் பொங்கு அழல் தோன்றும் சிறந்த
நகை–வித்து–ஆ த் தோன்றும் உவகை பகை ஒருவன்
முன்னம் வித்து–ஆக முளைக்கும் முளைத்த–பின்
இன்னா வித்து ஆகிவிடும்


-------------------------------------
proofed and segmented by v.s.r

#31
பிணி—அன்னர் பின்—நோக்கா ப் பெண்டிர் உலகு—இன்—கு
அணி—அன்னர் அன்பு—உடைய—மக்கள் பிணி பயிலும்
புல்—அன்னர் புல்—அறிவு—இன்—ஆடவர் கல்—அன்னர்
வல்—என்ற—நெஞ்சத்தவர்

#32
அந்தணர்—இன் மிக்க பிறப்பு இல்லை என்—செயினும்
தாய்—இன்—சிறந்த—தமர் இல்லை யாதும்
வளமை—ஒடு ஒக்கும் வனப்பு—இல்லை எண்ணின்
இளமை—ஒடு ஒப்பதூஉம் இல்

#33
இரும்பு—இன் இரும்பு—இடை போழ்ப பெருஞ்—சிறப்பு—இன்
நீர்—உண்டார் நீர்—ஆன் வாய்—பூசுப தேரின்
அரிய அரியவற்றால் கொள்ப பெரிய
பெரியர்—ஆன் எய்தப்படும்

#34
மற—க்—களி மன்னர்—முன் தோன்றும் சிறந்த
அற—க்—களி இல்லாதார்—க்கு ஈயும்—முன் தோன்றும்
விய—க்—களி நல்கூர்ந்தார்—மேற்று—ஆம் கய—க்—களி
ஊர்—இல் பிளிற்றிவிடும்

#35
மை—ஆல் தளிர்க்கும் மலர்க்கண்கள் மால்—இருள்
நெய்—ஆல் தளிர்க்கும் நிமிர் சுடர் பெய்ய
முழங்க த் தளிர்க்கும் குருகு—இலை நட்டார்
வழங்க த் தளிர்க்கும்—ஆம் மேல்

#36
நகை இனிது நட்டார்—நடுவண் பொருள்—இன்—
தொகை இனிது தொட்டு வழங்கின் தகை—உடைய—


proofed and segmented by v.s.r

பெண் இனிது பேணி வழிபடின் பண் இனிது
பாடல்–உணர்வார்–அகத்து

#37
கரப்பவர்–க்கு ச் செல் சார் கவிழ்தல் எ–ஞ்–ஞான்றும்
இரப்பவர்–க்கு ச் செல் சார் ஒன்று ஈவோர் பரப்பு அமைந்த
தானை–க்கு ச் செல் சார் தறுகண்மை ஊன்–உண்டல்–
செய்யாமை செல் சார் உயிர்–க்கு

#38
கண்டது–ஏ செய்ப–வ்–ஆம் கம்மியர் உண்டு என க்
கேட்டது–ஏ செய்ப புலன் ஆள்வார் வேட்ட
இனிய–வ்–ஏ செய்ப அமைந்தார் முனியாதார்
முன்னிய–வ்–ஏ செய்யும் திரு

#39
திரு–உம் திணை–வகை–ஆன் நில்லா பெரு–வலி க்
கூற்றம்–உம் கூறுவ செய்து உண்ணாது ஆற்ற
மறைக்க–மறையாது–ஆம் காமம் முறை–உம்
இறை–வகை–ஆன் நின்றுவிடும்

#40
பிறக்கும்–கால் பேர்–எனவும்–பேரா இறக்கும்–கால்
நில்–எனவும்–நில்லா உயிர் எனைத்தும் நல்லாள்
உடம்படின் தான்–ஏ–பெருகும் கெடும்–பொழுது–இல்
கண்டன–வ்–உம் காணா–கெடும்

#41
போர் அறின் வாடும் பொருநர் சீர் கீழ்–வீழ்ந்த
வேர் அறின் வாடும் மரம்–எல்லாம் நீர்–பாய்–
மடை அறின் நீள்–நெய்தல் வாடும் படை அறின்
மன்னர் சீர் வாடிவிடும்

#42
ஏதிலார்—என்பார் இயல்பு—இல்லார் யார்—யார்—க்க்—உம்
காதலார்—என்பார் தகவு—உடையார் மேதக்க
தந்தை—எனப்படுவான் தன்—உவாத்தி தாய்—என்பாள்
முந்து—தான்—செய்த—வினை

#43
பொறி கெடும் நாண்—அற்ற—போழ்து—ஏ நெறி—ப்—பட்ட
ஐவர்—ஆல் தான்—ஏ வினை கெடும் பொய்யா
நலம் கெடும் நீர் அற்ற பைங்—கூழ் நலம் மாறின்
நண்பினார் நண்பு கெடும்

#44
நன்றி சாம் நன்று—அறியாதார்—முன்னர் சென்ற
விருந்து—உம் விருப்பு—இலார்—முன் சாம் அரும்—புணர்ப்பு—இன்
பாடல் சாம் பண்—அறியாதார்—முன்னர் ஊடல் சாம்
ஊடல்—உணரார்—அகத்து

#45
நாற்றம் உரைக்கும் மலர் உண்மை கூறிய
மாற்றம் உரைக்கும் வினை—நலம் தூக்கின்
அகம் பொதிந்த தீமை மனம் உரைக்கும் முன்னம்
முகம் போல முன்—உரைப்பது இல்

#46
மழை—இன்றி மாநிலத்தார்—க்கு இல்லை மழை—உம்
தவம்—இலார்—இல்—வழி இல்லை தவம்—உம்
அரசு—இலார்—இல்—வழி இல்லை அரசன்—உம்
இல்வாழ்வார்—இல்—வழி இல்

#47
போது—இன்—ஆன் நந்தும் புனை—தண்—தார் மற்று அதன்—
தாது—இன்—ஆன் நந்தும் சுரும்பு—எல்லாம் தீது—இல்

வினை-இன்-ஆன் நந்துவர் மக்கள்-உம் தம்-தம்
நனை-இன்-ஆன் நந்தும் நறு

#48
சிறந்தார்-க்கு அரிய செறுதல் எ-ஞ்-ஞான்றும்
பிறந்தார்-க்கு அரிய துணை துறந்து வாழ்தல்
வரைந்தார்-க்கு அரிய வகுத்தூண் இரந்தார்-க்கு ஒன்று-
இல்-என்றல் யார்க்கும் அரிது

#49
இரை சுடும் இன்புறு யாக்கை-உள் பட்டால்
உரை சுடும் ஒண்மை-இலார்-ஐ வரை-கொள்ளா-
முன்னை ஒருவன் வினை சுடும் வேந்தன்-ஐ-உம்
தன்-அடைந்த-சேனை சுடும்

#50
எள்ளல்-பொருளது இகழ்தல் ஒருவன்-ஐ
உள்ளல்-பொருளது உறுதி-ச்-சொல் உள்-அறிந்து
சேர்தல்-பொருளது அற-நெறி பல்-நூல்-உம்
தேர்தல்-பொருள பொருள்

#51
யாறு-உள் அடங்கும் குளம் உள வீறு சால்
மன்னர் விழையும் குடி உள தொல்-மரபு-இன்
வேதம் உறுவன பாட்டு உள வேளாண்மை
வேள்வி-ஓடு ஒப்ப உள

#52
எருது-உடையான் வேளாளன் ஏலாதான் பார்ப்பான்
ஒரு-தொடை-ஆன் வெல்வது கோழி உரு-ஓடு
அறிவு-உடையாள் இல்வாழ்க்கை-ப்-பெண் என்ப சேனை ச்
செறிவு-உடையான் சேனாபதி

#53
யானை–உடையார் கதன் உவப்பார் மன்னர்
கடும்–பரி–மா க் காதலித்து ஊர்வர் கொடுங்–குழை–
நல்லார்–ஐ நல்லவர் நாண் உவப்பர் அல்லார்–ஐ
அல்லார் உவப்பது கேடு

#54
கண்–இன் சிறந்த உறுப்பு இல்லை கொண்டான்–இன்
துன்னிய கேளிர் பிறர்–இல்லை மக்கள்–இன்
ஒண்மைய வாய் சான்ற பொருள் இல்லை ஈன்றாள்–இன்
என்ன–கடவுள்–உம்–இல்

#55
கற்றன்னர் கற்றார்–ஐ க் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றார்–ஐ ச் சேர்ந்தவர் தெற்ற–என
உற்றது உரையாதார் உள்–கரந்து பாம்பு உறையும்
புற்று அன்னர் புல்–அறிவினார்

#56
மாண்டவர் மாண்ட–வினை பெறுப வேண்டாதார்
வேண்டா–வினை–உம் பெறுப–வ்–ஏ யாண்டும்
பிறப்பு–ஆல் பிறப்பார் அறன்–இன்புறுவர்
துறப்பார் துறக்கத்தவர்

#57
என்றும்–உள–ஆகும் நாள்–உம் இரு–சுடர்–உம்
என்றும் பிணி–உம் தொழில்–ஒக்கும் என்றும்
கொடுப்பார்–உம் கொள்வார்–உம் அன்னர் பிறப்பார்–உம்
சாவார்–உம் என்றும் உளர்

#58
இனிது–உண்பான்–என்பான் உயிர் கொல்லாது உண்பான்
முனிதக்கான்–என்பான் முகன் ஒழிந்து வாழ்வான்


proofed and segmented by v.s.r

தனியன்—எனப்படுவான் செய்த—நன்று—இல்லான்
இனியன்—எனப்படுவான் யார்—யார்க்கேயானும்
முனியா ஒழுக்கத்தவன்

#59
ஈத்து உண்பான் என்பான் இசை நடுவான் மற்று அவன்—
கைத்து—உண்பான் காங்கி—எனப்படுவான் தெற்ற
நகை ஆகும் நண்ணுர்—முன் சேறல் பகை—ஆகும்
பாடு—அறியாதான்—ஐ இரவு

#60
நெய் விதிர்ப்ப நந்தும் நெருப்பு அழல் சேர்ந்து
வழுத்த வரம் கொடுப்பர் நாகர் தொழு த் திறந்து
கன்று ஊட்ட நந்தும் கறவை கலம் பரப்பி
நன்று—ஊட்ட நந்தும் விருந்து

#61
பழி—இன்மை மக்கள்—ஆல் காண்க ஒருவன்
கெழி—இன்மை கேட்டால்—அறிக பொருள்—இன்—
நிகழ்ச்சி—ஆன் ஆக்கம் அறிக புகழ்ச்சி—ஆன்
போற்ருதார் போற்றப்படும்

#62
கண்—உள்ளும் காண்புழி க் காதற்று—ஆம் பெண்—உள்
உரு—இன்றி—மாண்ட—உள—ஆம் ஒரு—வழி
நாட்டுள்ளும்—நல்ல—பதி உள பாட்டு—உள்ளும்
பாடு—எய்தும்—பாட்டு—ஏ உள

#63
திரி அழல் காணின் தொழுப விறகு—இன்—
எரி—அழல் காணின் இகழ்ப ஒரு—குடி—இல்
கல்லாது மூத்தான்—ஐ க் கைவிட்டு கற்றுன்—
இளமை பாராட்டும் உலகு



-------------------------------------

proofed and segmented by v.s.r

#64
கைத்து உடையான் காமுற்றது உண்டாகும் வித்து—இன்—
முளை—க்—குழாம் நீர்—உண்டேல் உண்டாம் திரு—க்—குழாம்
ஒண்—செய்யாள் பார்த்துறின் உண்டாகும் மற்று அவள்—
துன்புறுவாள்—ஆகின் கெடும்

#65
ஊன் உண்டு உழுவை நிறம் பெறூஉம் நீர் நிலத்து ப்
புல்—இன்—ஆன் இன்புறூஉம் காலேயம் நெல்—இன்—
அரிசி—ஆன் இன்புறூஉம் கீழ்—எல்லாம் தம்—தம்
வரிசை—ஆன் இன்புறூஉம் மேல்

#66
பின்ன—வ்—ஆம் பின்—அதிர்க்கும் செய்வினை என்—பெறினும்
முன்ன—வ்—ஆம் முன்னம்—அறிந்தார்கள்—கு என்னும்
அவா—ஆம் அடைந்தார்கள்—கு உள்ளம் தவா—வ்—ஆம்
அவா—இல்லார் செய்யும் வினை

#67
கைத்து—இல்லார் நல்லவர் கைத்து—உண்டாய் க் காப்பார்—
இன்
வைத்தார்—இன் நல்லர் வறியவர் பைத்து—எழுந்து
வைதார்—இன் நல்லர் பொறுப்பவர் செய்தார்—இன்—
நல்லர் சிதையாதவர்

#68
மகன் உரைக்கும் தந்தை—நலத்தை ஒருவன்—
முகன் உரைக்கும் உள்—நின்ற—வேட்கை அகல்—நீர் ப்
பிலத்து—இயல்பு புக்கான் உரைக்கும் நிலத்து—இயல்பு
வானம் உரைத்துவிடும்

#69
பதி நன்று பல்லார் உறையின் ஒருவன்—
மதி நன்று மாசு—அற க் கற்பின் நுதி—மருப்பு—இன்—
ஏற்றான் வீறு எய்தும் இன—நிரை தான் கொடுக்கும்
சோற்றான் வீறு எய்தும் குடி

#70
ஊர்ந்தான் வகைய கலின—மா நேர்ந்து ஒருவன்
ஆற்றல் வகைய அறம் செயல் தோட்ட—
குளத்து அனைய தூம்பு—இன் அகலங்கள் தம்—தம்—
வளத்து அனைய வாழ்வார் வழக்கு

#71
ஊழி—உம் யாண்டு எண்ணி யாத்தன யாமம்—உம்
நாழிகை—ஆன்—ஏ நடந்தன தாழ்—ஈயா—
தெற்ற்—என்றார்—கண்—ஏ தெளிந்தனர் வெட்க்—என்றார்
வெஞ்சொல்—ஆல் இன்புறுவார்

#72
கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத
பேதையான் வீழ்வான்—ஏல் கால் முரியும் எல்லாம்
ஒருமை த் தான் செய்த கருவி தெரியின் மெய்
பொய்யா வித்து—ஆகிவிடும்

#73
தேவர்—அனையர்—புலவர்—உம் தேவர்—
தமர் அனையர் ஓர்—ஊர்—உறைவார் தமர்—உள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றார்—ஐ க் காதலவர்

#74
தூர்ந்து ஒழியும் பொய் பிறந்த—போழ்து—ஏ மருத்துவன்
சொல் என்ற—போழ்து—ஏ பிணி உரைக்கும் நல்லார்

விடுக என்ற—போழ்து—ஏ விடுக அதற்கு உரியான்
தா எனின் தாயம் வகுத்து

#75
நாக்கின் அறிப இனியவை மூக்கு—இன்—ஆன்
மோந்து அறிப எல்லா—மலர்கள்—உம் நோக்கு—உள்ளும்
கண்—இன்—ஆன் காண்ப அணியவற்றை தொக்கு—இருந்து
எண்—இன்—ஆன் எண்ணப்படும்

#76
சாவாத—இல்லை பிறந்த—உயிர்—எல்லாம்
தாவாத—இல்லை—வலிகள்—உம் மூவா—
இளமை இயைந்தார்—உம்—இல்லை வளமை—இல்
கேடு—இன்றி ச் சென்றார்—உம் இல்

#77
சொல்லான் அறிப ஒருவன்—ஐ மெல்—என்ற
நீர்—ஆன் அறிப மடு—வ்—இனை யார்—கண்—உம்
ஒப்புரவு—இன்—ஆன் அறிப சான்றாண்மை மெய்—க்—கண்
மகிழ்—ஆன் அறிப நறா

#78
நா—அன்று—ஓ நட்பு—அறுக்கும் தேற்றம் இல் பேதை
விடும்—அன்று—ஓ வீங்க ப் பிணிப்பின் அவாஅ—ப்—
படும்—அன்று—ஓ பல்—நூல்—வலை—இல் அடும்—அன்று—ஓ
மாறு உள்—நிறுக்கும் துணிபு

#79
கொடுப்பின் அசனம் கொடுக்க விடுப்பின்
உயிர்—இடை—இட்ட விடுக்க எடுப்பின்
கிளை—உள் அழிந்தார் எடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்துவிடல்


proofed and segmented by v.s.r

#80
நலன்—உம் இளமை—உம் நல்குரவு—இன்—கீழ் ச் சாம்
குலன்—உம் குடிமை—உம் கல்லாமை—க்—கீழ் ச் சாம்
வளம் இல் குளத்தின்—கீழ் நெல் சாம் பரம்—அல்லா—ப்—
பண்டத்தின்—கீழ் ச் சாம் பகடு

#81
நல்லார்—க்கு—உம் தம்—ஊர் என்று ஊர்—இல்லை நன்னெறி ச்
செல்வார்—க்கு—உம் தம்—ஊர் என்று ஊர்—இல்லை அல்லாக்—
கடைகள்—கு—உம் தம்—ஊர் என்று ஊர்—இல்லை தம்—கைத்து—
உடையார்—க்கு—உம் எ—வ்—ஊர்—உம் ஊர்

#82
கல்லா—ஒருவர்—க்கு த் தம்—வாய்—இல்—சொல் கூற்றம்
மெல்—இலை வாழை—க்கு த் தான்—ஈன்ற—காய் கூற்றம்
அல்லவை—செய்வார்—க்கு அறம் கூற்றம் கூற்றம்—ஏ
இல்—இருந்து தீங்கு ஒழுகுவாள்

#83
நீர்—ஆன் வீறு எய்தும் விளை—நிலம் நீர் வழங்கும்
பண்டத்தால் பாடு எய்தும் பட்டினம் கொண்டு ஆளும்
நாட்ட்—ஆன் வீறு எய்துவர் மன்னவர் கூத்து ஒருவன்
பாடல்—ஆன் பாடு—பெறும்

#84
ஒன்று ஊக்கல் பெண்டிர் தொழில் நலம் என்றும்
அறன் ஊக்கல் அந்தணர் உள்ளம் பிறன் ஆளும்
நாடு ஊக்கல் மன்னர் தொழில் நலம் கேடு ஊக்கல்
கேளிர் ஒரீஇ—விடல்

#85
கள்ளாமை—வேண்டும் கடிய வருதல்—ஆன்
தள்ளாமை—வேண்டும் தகுதி—உடையன


proofed and segmented by v.s.r

நள்ளாமை–வேண்டும் சிறியர்–ஒடு யார்–மாட்டும்
கொள்ளாமை–வேண்டும் பகை

#86
பெருக்குக நட்டார்–ஐ நன்று–இன்–பால் உய்த்து
தருக்குக ஒட்டார்–ஐ க் காலம் அறிந்து–ஏ
அருக்குக யார்–மாட்டும் உண்டி சுருக்குக
செல்லா–இடத்து ச் சினம்

#87
மடிமை கெடுவார்–கண் நிற்கும் கொடுமை–தான்
பேணுமை–செய்வார்–கண் நிற்கும்–ஆம் பேணிய
நாண்–இன்–வரை நிற்பர் நல்–பெண்டிர் நட்டு–அமைந்த
தூண்–இன்–கண் நிற்கும் களிறு

#88
மறை அறிப அந்தண்–புலவர் முறை–ஒடு
வென்றி அறிப அரசர்கள் என்றும்
வணங்கல் அணிகலம் சான்றோர்–க்கு அஃது–அன்றி
அணங்கல் வணங்கின்று பெண்

#89
பட்டாங்கே–பட்டு ஒழுகும் பண்பு உடையாள் காப்பினும்
பெட்டாங்கு–ஒழுகும் பிணையிலி முட்டினும்
சென்றாங்கே சென்று ஒழுகும் காமம் கரப்பினும்
கொன்றான்–மேல் நிற்கும் கொலை

#90
வன்கண் பெருகின் வலி பெருகும் பால்மொழியார்–
இன்கண் பெருகின் இனம் பெருகும் சீர்–சான்ற
மென்கண் பெருகின் அறம் பெருகும் வன்கண்–
கயம் பெருகின் பாவம் பெரிது

#91
இளமை-ப்-பருவத்து க் கல்லாமை குற்றம்
வளம்-இலா-ப்-போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞர்-இல்-போழ்து-இல் சினம் குற்றம் குற்றம்
தம்-அல்லார்-கையகத்து-ஊண்

#92
எல்லா-இடத்து-உம் கொலை தீது மக்கள்-ஐ க்
கல்லா-வளரவிடல் தீது நல்லார்
நலம் தீது நாண் அற்று நிற்பின் குலம் தீது
கொள்கை-அழிந்த-க்-கடை

#93
ஆசாரம்-என்பது-கல்வி அறம் சேர்ந்த
போகம் உடைமை பொருள்-ஆட்சி யார்-கண்-உம்
கண்ணோட்டம்-இன்மை முறைமை தெரிந்து ஆள்வான்
உள்-நாட்டம்-இன்மை-உம்-இல்

#94
கள்-இன்-இடும்பை களி அறியும் நீர்-இடும்பை
புள்-இன்-உள் ஓங்கல் அறியும் நிரப்பிடும்பை
பல்-பெண்டிராளன் அறியும் கரப்பிடும்பை
கள்வன் அறிந்துவிடும்

#95
வடு-ச்-சொல் நயம்-இல்லார்-வாய் த் தோன்றும் கற்றூர்-
வாய் ச்
சாயினும் தோன்ற கரப்பு-ச்-சொல் தீய-
பரப்பு-ச்-சொல் சான்றூர்-வாய் த் தோன்ற கரப்பு-ச்-
சொல்
கீழ்கள்-வாய் த் தோன்றிவிடும்

#96
வால்–இழையார்–முன்னர் வனப்பு–இலான் பாடு–இலன்
சாலும்–அவை–ப்–படின் கல்லாதான் பாடு–இலன்
கற்றன்–ஒருவன்–உம் பாடு–இலன்–ஏ கல்லாதார்
பேதையார்–முன்னர்–ப்–படின்

#97
மாசு–படினும் மணி தன்–சீர் குன்றது–ஆம்
பூசி–க்–கொளினும் இரும்பு–இன்–கண் மாசு ஒட்டும்
பாசத்துள்–இட்டு விளக்கினும் கீழ்–தன்னே–
மாசு–உடைமை–காட்டிவிடும்

#98
எண்–ஒக்கும் சான்றோர் மரீஇயார்–இன் தீராமை
புண் ஒக்கும் போற்றர்–உடனுறைவு பண்ணிய–
யாழ் ஒக்கும் நட்டார் கழறும் சொல் பாழ் ஒக்கும்
பண்பு–உடையாள் இல்லா மனே

#99
ஏரி சிறிது ஆயின் நீர்–ஊரும் இல்லத்து
வாரி சிறிது ஆயின் பெண்–ஊரும் மேலே த்
தவம் சிறிது ஆயின் வினே–ஊரும் ஊரும்
உரன் சிறிது ஆயின் பகை

#100
அலேப்பான் பிறிது–உயிர்–ஐ ஆக்கல்–உம் குற்றம்
விலே–ப்–பால்–இன்–கொண்டு ஊன்–மிசைதல்–உம் குற்றம்
சொலல்–பால–அல்லாத சொல்லுதல்–உம் குற்றம்
கொலேப்பால்–உம் குற்றம்–ஏ–ஆம்

#101
மனை-க்கு விளக்கம் மடவாள் மடவாள்-
தனக்கு த் தகை சால் புதல்வர் மனக்கு இனிய

காதல் புதல்வர்-க்கு க் கல்வி-ஏ கல்வி-க்கு-உம்
ஓதின் புகழ் சால் உணர்வு


---------------------------------------
proofed and segmented by v.s.r